# சென்னை – 600 005, மாநிலக் கல்லூரி (தன்னாட்சி) முதல்வர் அவர்களின் செயல்முறைகள்

பிறப்பிப்பவர் : முனைவர். கோ. கிருஷ்ணன், எம்.ஏ., எம்.ஃபில்., பிஎச்.டி., எம்.எட்.,

ந.க.எண். 794 / உ / 2020 நாள். 18–09–2020

பொருள் : கல்லூரிக் கல்வித் துறை–சென்னை–5, மாநிலக் கல்லூரி (தன்னாட்சி) – தட்டச்சர் தொகுதி IV தேர்வு மூலம் தெரிவு செய்யப்பட்டு பணி அமர்த்தப்பட்டது பணிவரன்முறை செய்தல் – ஆணை வழங்குதல் – தொடர்பாக.

பார்வை : 1. கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண். 7882 / பி1 / 2019, நாள். 28–02–2019, 24–04–2019 மற்றும் 10–03–2020.

2. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய செயலர் கடித எண். 1707/PSD-A/2019, நாள். 20.02.2019 மற்றும் கடித எண். 1707/PSD-A3/2019, நாள். 30.03.2019.

3. அரசுத் தேர்வுகள் இணை இயக்குநர் (பணியாளர்) அவர்களின் கடித ந. க. எண். 265556/வி/2020, நாள். 04–02–2020.

******

பார்வை (1)–ல் காணும் கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்களின் கடிதத்தில் பெறப்பட்டுள்ள தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய கடிதங்களில் 2015–2016, 2016–2017, மற்றும் 2017–2018 தொகுதி IV தட்டச்சர் பதவிக்குத் தெரிவு செய்யப்பட்டு இக்கல்லூரிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தட்டச்சர், செல்வி. பெ. இலக்கியா என்பாருக்கு கீழ்க்காணும் நிபந்தனைக்குட்பட்டு 11–03–2019 முதல் பணிவரன்முறை செய்து ஆணை வழங்கி இவ்விவரத்தினை கல்லூரிக் கல்வி இயக்குநருக்குத் தெரிவிக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பணிவரன்முறை தொகுதி IV 2015–2016, 2016–2017, மற்றும் 2017–2018 வரை பணிநியமனம் தொடர்பாக பார்வை(1)ல் கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்களின் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, உயர் நீதி மன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்குகளில் வழங்கப்பட உள்ள இறுதி தீர்ப்பாணைக்குட்பட்டது.

பார்வை(1)–ல் கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்களின் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, பார்வை (3)–ல் காணும் அரசுத் தேர்வுகள் இணை இயக்குநர் (பணியாளர்) அவர்களால் பத்தாம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழ் உண்மைதன்மை பெறப்பட்டுள்ளது.

எனவே, இக்கல்லூரியில் பணிபுரியும் தட்டச்சர், செல்வி. பெ. இலக்கியா என்பாருக்குப் பணியில் சேர்ந்த நாளான 11–03–2019 முதல் பணிவரன் செய்து ஆணை வழங்கலாகிறது.

28/9/2020

முதல்வர்
மாநிலக் கல்லூரி (த)
சென்னை–05

பெறுநர்: செல்வி. பெ. இலக்கியா, தட்டச்சர்.

நகல்: 1. கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்கள், சென்னை – 06.
2. கல்லூரிக் கல்வி இணை இயக்குநர், (சென்னை மண்டலம்), சென்னை – 15.